# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2017

| தரம் - 10 | கர்நாடக சங்கீதம் | 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

➢ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. சிரவணகலை என அழைக்கப்படுவது.
(1) சங்கீதம் (2) நடனம் (3) சித்திரம் (4) நாடகம்

2. தாய் இராகத்தின் ஸ்வரஸ்தானங்களை மட்டும் எடுத்துக்கொள்ளும் ராகம்?
(1) பாஷாங்க ராகம் (2) உபாங்கராகம் (3) வக்ரராகம் (4) வர்ஜராகம்

3. அப்பியாச கானத்திற்கும் சபாகானத்திற்கும் பொதுவான உருப்படி.
(1) கீதம் (2) வர்ணம் (3) கீர்த்தனை (4) ஜாவளி

4. திரிபுடைதாளத்திற்குரிய அங்கங்களுடன் முன்னால் ஒரு லகுவை சேர்த்தால் வரும் தாளம்.
(1) ரூபகதாளம் (2) ஜம்பைதாளம் (3) ஏகதாளம் (4) அடதாளம்

5. "சிவபெருமானே" என்ற சஞ்சாரி கீதம் அமைந்துள்ள இராகம்.
(1) ஆரபி (2) மத்தியமாவதி (3) சங்கராபரணம் (4) ஆனந்தபைரவி

6. அலங்காரம் ஒன்றில் வரும் ஆவர்த்தனங்களின் எண்ணிக்கை?
(1) 07 (2) 05 (3) 10 (4) 06

7. கதையுடன் கூடிய நகைச்சுவையும் உரையாடலும் கலந்த இசை நிகழ்ச்சி.
(1) இசைநாடகம் (2) கூத்து (3) நாட்டியநாடகம் (4) வில்லுப்பாட்டு

8. தோடி இராகத்தின் மேள எண்.
(1) 08 (2) 15 (3) 09 (4) 29

9. திருவிசைப்பா பாடப்படும் இராகம்.
(1) கீதம் (2) ஜதிஸ்வரம் (3) வெண்பா (4) திருப்புகழ்

10. அன்னிய ஸ்வரத்திற்குரிய குறியீடு.
(1) 0 (2) * (3) // (4) U

11. தாய் இராகத்தில் இருந்த பிறந்த இராகம்.
(1) மேளராகம் (2) கர்த்தாராகம் (3) ஜன்னியராகம் (4) சம்பூர்ணராகம்.

12. "விசித்திரசித்த" என்ற விருதினைப் பெற்ற மன்னன்?
(1) சங்கிலியன் (2) மகேந்திரவர்மன் (3) இராஜராஜசோழன் (4) அருள்மன்

13. வீணை வாத்தியத்தில் உள்ள மெட்டுக்கள்.
(1) 24 (2) 07 (3) 15 (4) 12

14. ஸாரீ ;; கா, மா என்ற ஸ்வரக்கோர்வையின் இடம்பெறும் அட்சரங்கள் எத்தனை?
(1) 15 (2) 13 (3) 14 (4) 12

15. வில்லுப்பாட்டு நிகழச்சிக்கு பக்க வாத்தியமாக பயன்படும் வாத்தியம்
(1) வீணை (2) விற்கடம் (3) வயலின் (4) தம்புரா

16. சுருதிக்காகப் பயன்படுத்தப்படும் வாத்தியம்
(1) தம்புரா (2) வயலின் (3) வீணை (4) மிருதங்கம்

17. ஸ்வரபல்லவி என அழைக்கப்படுவது.
(1) ஸ்வரஜதி (2) ஜதீஸ்வரம் (3) கீதம் (4) பதம்

18. வக்ர இராகத்திற்கு உதாரணம் தருக?
(1) மோகனம் (2) பிலஹரி (3) கமாஸ் (4) ஆரபி

19. ஜாதி பேதமடையும் அங்கம்
(1) லகு (2) துருதம் (3) அனுதுருதம் (4) குரு

20. சபாகான உருப்படிகளில் ஒன்று
(1) அலங்காரம் (2) ஜதிஸ்வரம் (3) கீதம் (4) தில்லானா

21. "இனி நமக்கொரு கவ்லையுமில்லை….." என்ற பாடலை இயற்றியவர்.
(1) பாபநாசம் சிவன் (2) புரந்தரதாஸர்
(3) முத்துத்தாண்டவர் (4) மயூரம் வேதநாயம் பிள்ளை

22. "பழம் பஞ்சுரம்" என்ற பண்ணில் நீர் கற்ற தேவாரம்.
(1) பண்ணும் பதமேழும் (2) மானினோர் விழி
(3) அங்கமும் வேதமும் (4) உற்றுமை சேர்வது.

23. முத்துத்தாண்டவரால் முதல் முதலில் பாடப்பட்ட உருப்படி எது?
(1) தரிசனம் செய்வேனே (2) அருமருந்தோடு தனிமருந்து
(3) காணாமல் வீணிலே (4) பூலோப கைலாச

24. தோடி இராகத்தைப் பாடுவதில் தேர்ச்சி பெற்றவர்.
(1) தோடி சீதாராமய்யர் (2) தியாகராஜசுவாமிகள் (3) நசரய்யர் (4) பாபநாசம் சிவன்

25. புல்லாங்குழல், வீணை, மிருதங்கம், வயலின் ஆகிய வாத்தியங்களில் ஏகத்வனி வாத்தியம்
(1) வீணை (2) புல்லாங்குழல் (3) மிருதங்கம் (4) வயலின்

26. ஆரோகணம், அவரோகணம் இரண்டும் வக்ரமாய் அமைந்த இராகம்.
(1) உபாங்கராகம் (2) பாஷாங்கராகம் (3) வர்ஜராகம் (4) உபயவக்ரராகம்

27. கொல்லி, கொல்லி கௌவாணம், காந்தாரம், பியந்தை காந்தாரம் குறிக்கும் இராகம்..
(1) நீலாம்பரி (2) பூபாளம் (3) நவரோஜ் (4) பந்துவராளி

28. பதவர்ணம் இடம் பெறும் நிகழ்வு.
(1) நாட்டிய நிகழ்வு (2) இசைநிகழ்வு (3) இசைநாடகம் (4) கூத்து நிகழ்வு

29. பண்கள் பாடப்பட வேண்டிய கான காலத்தைக் கொண்டு எத்தனை பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.
(1) 02 (2) 03 (3) 08 (4) 24

30. கரகரப்பிரியாவின் மேள எண்.
(1) 65 (2) 22 (3) 15 (4) 28

31. சிறுவர் பாடல்களுக்கு மெட்டமைப்பதற்கு உகந்த ராகம்.
(1) சங்கராபரணம் (2) ஆனந்தபைரவி (3) மோகனம் (4) யாவும் சரி

32. ஒளடவ ராகத்திற்கு உதாரணம்
(1) மோகனம் (2) காம்போதி (3) தோடி (4) கமாஸ்

33. திருத்தாண்டகம் பாடக்கூடிய ராகம்.
(1) மோகனம் (2) ஹரிகாம்போதி (3) ஆரபி (4) மத்தியமாவதி

34. பேதமடையாத ஸ்வரங்கள்
(1) ஸம (2) ஸக (3) ஸத (4) ஸப

35. "சந்தப் பாவலர்" என்று போற்றப்படுபவர்.
(1) தியாகராஜ சுவாமிகள் (2) முத்துஸ்வாமி தீட்சிதர்
(3) அருணகிரிநாதர் (4) திருஞான சம்பந்தர்

36. பத வர்ணத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்.
(1) தானவர்ணம் (2) இராகமாலிகாவர்ணம்
(3) செளக்கவர்ணம் (4) நவராகமாலிகா வர்ணம்

37. முல்லைப் பண் என்னும் இராகம்.
(1) பிலஹரி (2) ஹம்சத்வனி (3) மோகனம் (4) ஆரபி

38. சப்த தாளங்களில் அதிகூடிய அட்சர எண்ணிக்கையினை கொண்ட தாளம் எது?
(1) துருவதாளம் (2) அடதாளம் (3) ஜம்பைதாளம் (4) மட்டிய தாளம்.

39. எல்லா ஸ்வரங்களும் தீவிரமாக அமைந்த ராகம்.
(1) கல்யாணி (2) மோகனம் (3) ஆரபி (4) பிலஹரி

40. "பெருமாளே" என்று முடியும் உருப்படி.
(1) தேவாரம் (2) திருப்புகழ் (3) புராணம் (4) வெண்பா

(20x1=40புள்ளிகள்)

Education கல்வி அதியாபன
kalvi.lk

## பகுதி II

➢ **முதலாம் வினாவிற்கும் ஏனைய வினாக்களில் நான்கு வினாக்களும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1. சுருக்கமான விடை தருக.

i. பஜனைப் பத்ததியின் தந்தை எனப்படுவர் யார்?

ii. இந்திய சங்கீதத்திலுள்ள பல தாளங்கள் அழிந்து போகாமல் பாதுகாப்பதற்கு உதவிய உருப்படி யாது?

iii. T.R மகாலிங்கம், ரமணி, T.N சுவாமிநாத பிள்ளை ஆகியோரால் வாசிக்கப்பட்ட வாத்தியம் யாது?

iv. முத்துத்தாண்டவரின் பதங்கள் எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறது?

v. சாமதானம் பாடப்பட்ட ராகம் யாது?

vi. கண்ட ஜாதி அடதாளத்தின் மொத்த அட்சரம் யாது?

vii. சங்கராபரணத்தின் நேர் பிரதி மத்திம ராகம் யாது?

viii. இந்திய சங்கீத்தில் ஏற்பட்ட பிரிவுகள் பற்றி குறிப்பிடும் நூல் யாது?

ix. வர்ணத்தின் இரு பிரிவுகள் எவை?

x. பந்துவராளி ராகத்திற்குரிய இரு பண்கள் எவை?

(12புள்ளிகள்)

2. பின்வரும் ராகங்களில் ஒன்றிற்கு விரிவான லட்சணம் எழுதுக.

i. 65வது மேள ராகம்.

ii. கரகரப்பிரியா

iii. தோடி

3.

i. வேணு என அழைக்கப்படும் துளைக்கருவி யாது? (2 புள்ளிகள்)

ii. அதன் படம் வரைந்து பாகங்களை குறிக்க. (6 புள்ளிகள்)

iii. அதன் அமைப்பை விளக்குக. (4 புள்ளிகள்)

4. வர்ணத்தின் இலட்சணத்தை எழுதுக. (12 புள்ளிகள்)

5. முத்துத்தாண்டவரின் வாழ்க்கை வரலாற்றை பின்வரும் தலைப்புக்களின் கீழ் ஆராய்க.

அ. வாழ்க்கைக் காலம் (1 புள்ளி)

ஆ. பிறந்த இடம் (1 புள்ளி)

இ. இளமைப் பெயர் (1 புள்ளி)

ஈ. வாழ்க்கை சம்பவம் (3 புள்ளி)

உ. இயற்றிய உருப்படிகள் (3 புள்ளி)

ஊ. உருப்படிகளின் சிறப்பு (3 புள்ளி)

6.

i. தற்கால வழக்கிலுள்ள பண்கள் எத்தனை? (2 புள்ளி)

ii. விரும்பிய 5 பண்களையும் பண்களுக்கு இணைமான கர்நாடக இசை ராகங்களையுமம் எழுதுக. (10 புள்ளி)



Education கல்வி